யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு    விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 93 பிரசோற்பத்தி மாசி 16 (28.02.1992) வெள்ளி


## ★ ரொங்கோவா கப்பலில் இருந்த ஆயுதங்களுக்கு என்ன நடந்தது சிறப்பு நீதிமன்றில் மனுதாக்கல்

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் எடுத்துவந்ததாக கூறி இந்தியக் கடற்படையினால் கைப்பற்றப்பட்ட ரொங்கோவா என்ற கப்பலில் இருந்த ஆயுதங்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறியுமாறு அக்கப்பலின் கப்டன் பாலன் சென்னை சிறப்பு நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளார். இக்கப்பல் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியக் கடற்படையினால் கைப்பற்றப்பட்டது. இதில் புலிகளுக்கு ஆயுதம் எடுத்துவரப்பட்டதாகக் கூறி அப்பலையும் அதிலிருந்த பல லட்சம் — 04 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்குடாநாடு மீதான நடவடிக்கை வேறு வடிவில் இருக்குமாம்!

## கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தகவல்

யாழ்குடாநாடு மீதான இராணுவத் தாக்குதல் வழமையானது போலல்லாது வேறுவடிவிலானதாகவே இருக்கும் என கொழும்பில் இராணுவ அதிகாரிகள் கூறியதாக வெரித்தாஸ் வானொலி நேற்றுக் குறிப்பிட்டது.

வவுனியாவில் தற்போது நடைபெற்று முடிந்த வன்னி விக்ரம இராணுவ நடவடிக்கை யாழ் குடாமீதான தாக்குதலின் முன்னோடி நடவடிக்கையாக இருக்கலாம் என கொழும்பிலிருந்து வெளிவரும் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இது குறித்து கருத்து வெளியிட்ட இராணுவ அதிகாரிகள் வன்னி நடவடிக்கை தனியாக திட்டமிடப்பட்ட ஒன்றாகும் என மறுத்ததாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் இராணுவம் புதிய வடிவிலான தாக்குதலை குடாநாட்டில் மேற்கொண்டால் அதை எதிர்கொள்ள புலிகளும் புதிய பாணியிலான போர் உத்திகளைக் கையாளலாம் என வெரித்தாஸ் கருத்துத் தெரிவித்தது.

### மாவுடன் குமண கப்பல்

திருகோணமலைக்குச் சென்ற குமண கப்பல் பிறிமா ஆலையில் இருந்து மா மூடைகளை ஏற்றிக் கொண்டு இன்னும் ஓரிரு தினங்களில் பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடையும் என தெரியவருகிறது (47)

### குச்சவெளியில் ஊரடங்கு

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி, முதலிக்குளம் (மொறவேவா) உதவி அரச அதிபர் பிரிவுகளில் இன்று அதிகாலை முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதாக கூட்டுப்படைத்தலைமையகம் அறிவித்தது

குடாநாடு மீது தாக்குதல்

## இராணுவத் தரப்பு அறிவிப்புகள் உளவியல் ரீதியான யுத்தமே!

யாழ் குடாநாடு மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இராணுவ தரப்பில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வருவது ஒரு உளவியல் யுத்தமே என பி.பி.ஸி. செய்தியாளர் லரிஜெகன் கருத்து வெளியிட்டார்.

இராணுவ தாக்குதல்கள் குறித்து எழுதிய செய்திக் கட்டுரை ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யாழ் மக்களை உளவியல் ரீதியில் அச்சுறுத்தவும், நெருக்கடியை ஏற்படுத்தவுமே இராணுவ தரப்பு இத்தகைய ஓர் உளவியல் யுத்தத்தை குடாநாட்டு மக்கள் மீது கட்டவிழ்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### பாகிஸ்தான், இங்கிலாந்து நேற்றைய போட்டியில் வெற்றி

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று நியூசிலாந்தில் ஹோபேர்ட்டில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி சிம்பாபே அணியை 53 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 4 விக்கற்றுகள் இழப்பிற்கு 254 ஓட்டங்களைப் பெற்றது. சிம்பாபே அணி அதன் துடுப்பாட்டத்தில் 50 ஓவர்களில் 7 விக்கற்றுகள் இழப்பிற்கு 201 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

அவுஸ்திரேலியா மெல்போனில் மேற்கிந்திய தீவுகள் அணிகளும் இங்கிலாந்து ...04 ஆம் பக்கம் பார்க்க

கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

### க.பொ.த. உயர்தர விசேட பரீட்சை ஏப்ரல் முதல் வாரத்தில்

க.பொ.த (உயர்தர) விசேட பரீட்சை 1991 எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நடத்துவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாக கல்விப்பணிப்பாளர் இ.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்கள் பரீட்சைக்குத் தம்மைத் தயார் படுத்திக் கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார் 04

30, 000 உலக தமிழர் கையொப்பமிட்டு

## யாழ். தாக்குதலை நிறுத்துமாறு ஐ. நா. செயலருக்கு மகஜர்!

யாழ். குடாநாடு மீது ஸ்ரீலங்கா இராணுவம் நடத்த திட்டமிட்டு வரும் தாக்குதலை நிறுத்த ஐ நா தலையிட்டு ஸ்ரீலங்கா அரசை நெருக்க வேண்டும் என உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்கள் தமிழ் அமைப்புகளைக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகள் அவுஸ்திரேலியா, அமெரிக்க நாடுகளில் பரந்து வாழும் சுமார் முப்பதாயிரம் தமிழர் கையொப்பமிட்டு ஐ நாவின் செயலர் பூட்ரஸ் காலிக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

## மீண்டும் ஊரடங்கு

மன்னார், வவுனியா மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் நீக்கப்பட்ட ஊரடங்குச்சட்டம் மீண்டும் நேற்று நள்ளிரவு முதல் இம்மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டுள்ளது

இதேவேளை முல்லைத்தீவு ஊரடங்கு தொடர்ந்து அமுலிலிருந்து வருவது தெரிந்ததே

### இன்றைய ஆட்டம்

உலகக்கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் இன்று இந்திய அணிக்கும் ஸ்ரீலங்கா அணிக்கும் இடையில் போட்டி இடம்பெறும்

## வன்னிவிக்ரம படையினர் ஓய்வு எடுக்கின்றனராம்!

வவுனியா - மன்னார் வீதியில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட வன்னி விக்ரம - III படையினர் தற்போது ஓய்வு எடுப்பதாக கொழும்பு அரசசார்பு பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

இப்படையினர் தமது நடவடிக்கைகளை கைவிட்டு தமது முகாம்களுக்கு திரும்பி விட்டதாக பி. பி. ஸி. செய்தியாளர் முன்னதாக தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

### பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 9மணியளவில் கட்டுவன் பகுதியை நோக்கி இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் இராணுவத்தால் தீர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது (47)

## போத்துவில் குண்டு வெடிப்பில் 5 மாணவர்கள் காயமாம்

நேற்று முன்தினம் பொத்துவில் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 5 மாணவர்கள் காயமடைந்ததாக நேற்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னதாக வந்த செய்தியில் இக்குண்டுவெடிப்பில் மூன்று மாணவர்கள் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

### வீரச்சாவு

நேற்று முன்தினம் வவுனியா பாவற்குளம் பகுதியில் நடைபெற்ற மோதலில் லெப். ராதா (ச, வேதீஸ்வரன் - திருமலை), வசந்தராஜ் ஆகியஇரு போராளிகள் வீரச்சாவு எய்தினர்

சங்கீதம், நடனம், மனையியல்

## தடைப்பட்ட பாடங்கள் மார்ச் மாதம் நடைபெறும்

1989, 90, 91 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இதுவரை நடைபெறாதிருக்கும் சங்கீதம், நடனம், மனையியல் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் முதல்வாரத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இந்த செய்முறைப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் கப்பலில் எடுத்து வரப்படும் எனவும் தெரியவருகிறது.

தபால்களைத் திருடிய

## தபால் ஊழியர்கள் மூவர் நேற்று விடுவிக்கப்பட்டனர்

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ் பிரதம தபாலகத்தில் தபால்பைகளை வெட்டி தபால்களை திருட முயன்றுமையும் மெய்யுமாக சக ஊழியரால் பிடிக்கப்பட்ட தபால் ஊழியர்கள் மூவரும் நேற்று விடுதலைப்புலிகளால் மனிதாபிமான முறையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்

விசாரணையின் பின்னர் இவர்கள் யாழ் பிரதம தபாலகத்தில் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் முன்னிலையில் நேற்று விடுவிக்கப்பட்டனர்

இந்த மூவரும் தாம் ஏற்கனவே புரிந்த திருட்டுக்களின் — 04 ஆம் பக்கம் பார்க்க

## போதைவஸ்து கடத்தினார்களாம் 6 இலங்கையர்க்கு

# பிரான்சில் ஐந்து வருட சிறை!

போதைவஸ்து கடத்திய குற்றத்திற்காக ஆறு இலங்கையர்களுக்கு பிரான்ஸில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் செண்ட் எட்னி நகர் நீதி மன்றம் இவர்கள் அறுவருக்கும் இத் தண்டனையை விதித்தது. இவர்களில் பிரான்ஸில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளோரும் அடங்குவர்.

ஐந்து வருடங்கள் இந்த ஆறு இலங்கையர்களுக்குமான தண்டனைக் காலமாக அமையும்.

## தடுத்துவைக்கப்பட்டுள்ள படகுகள்

### அகதிகளுக்குத் திரும்பக் கிடைக்கும்

தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்று மீண்டும் இலங்கை திரும்பியோர் முன்னர் அங்கு செல்வதற்குப் பயன்படுத்திய படகுகளும், இதர சாதனங்களும் மீண்டும் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்படவுள்ளன.

தற்பொழுது இந்தச் சாதனங்கள் தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

அடுத்த மாதத்திலிருந்து இவற்றைத் திருப்பி ஒப்படைக்கும் வேலைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் தமிழகத்திலிருந்து நாடு திரும்புவோர் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தியப் பொருட்களை இங்கு எடுத்துவர அனுமதிக்கப்படுவரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பிறப்புச்சான்றிதழ் பத்திரங்கள்

## நேற்று முதல் வழங்கப்படுகிறது

1954 ஆம் ஆண்டிற்கு பின் பிறந்தவர்களுக்கான பிறப்பத்தாட்சி பத்திரங்கள் நேற்றிலிருந்து யாழ் செயலக பதிவாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

போட்டோ பிரதி மூலம் விண்ணப்பித்த சுமார் 800க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பிறப்பத்தாட்சி பத்திரம் வழங்கப்பட்டபின்னரே மிகுதியானோருக்கு வழங்கப்படும் எனவும் போட்டோபிரதிக்கு விண்ணப்பித்தவர்களின் 11 ரூபாவும் விண்ணப்பதாரிகளுக்கு திருப்பி வழங்கப்படுவதாகவும் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 47

## ஜேர்மனுக்கு அனுப்பப்படவிருந்த போலி சான்றிதழ்கள் சிக்கின!

ஜேர்மனிக்கு அனுப்புவதற்கென தயாரிக்கப்பட்டு தயாராக வைக்கப்பட்டிருந்த பல போலி பிறப்புச் சான்றுப் பத்திரங்கள் கொழும்பில் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த போலி பிறப்புச்சான்றுப் பத்திரங்கள் ஜேர்மனியில் தற்போது தஞ்சம் கோரியுள்ள இலங்கையர்கள் போலி பயணத்திற்காவேறுகளைத் தயாரிக்கவென அங்கு அனுப்பப்படவிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 4மாத கலவரத்தை அடக்க

### ஹெய்ட்டிக்கு பிரான்ஸ் துருப்புக்கள்

ஆபிரிக்க நாடான ஹெய்ட்டியில் கடந்த நான்கு மாத காலமாக நடக்கும் இனக் கலவரத்தை நிறுத்த பிரான்ஸ் தனது துருப்புக்களை அங்கு அனுப்பிவைத்துள்ளது.

அரசபடையினருக்கும் இளர்ச்சிக்காரர்களுக்குமிடையே அங்கு கடந்த இக்கட்டிழமை கடும் சண்டை நடந்ததை அடுத்தே பிரான்ஸ் துருப்புக்கள் அங்கு விரைந்தன. நவம்பரில் இந்த மோதல்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்து துருப்புக்களை அனுப்பிடவுமாறு ஹெய்ட்டி அரசு பிரான்ஸை பல தடவைகள் கேட்டு வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. தனது துருப்புக்கள் ஓர் அமைதிப்படைபோல் அங்கு செயற்படுமென பிரான்ஸ் அறிவித்துள்ளது.

## செத்துப் பிழைக்கும் சதாம் ஹுசெய்ன்!

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெய்ன் பிரான்ஸில் அடுத்த மாதத்திலிருந்து அடிக்கடி செத்துப் பிழைக்கப் போகின்றார்.

பிரான்ஸ் நாட்டில் அடுத்த மாதம் ஹொலிவூட்டில் அமைந்துள்ள வாட்டினியின் 'அதிசய உலகம்' ஒன்றைத் திறக்கப் போகிறார்கள். அதில் சதாம் ஹுசெய்னின் பொம்மையை வைக்கப் போகிறார்கள்.

இந்தப் பொம்மையில் பொருத்தப்பட்டிருக்கும் பொத்தானை அழுத்தினால் பொம்மை இறந்துபோய் புகை வருவதுபோல அமைத்துள்ளனர். இந்தப் பொத்தானைக் குழந்தைகள் அழுத்தி வேடிக்கை செய்து பார்க்கக் கட்டணம் ஐம்பது ரூபா! பாவம் சதாம் ஹுசெய்ன் ஒருநாளைக்கு எத்தனை தடவைகள் செத்துப் பிழைக்கப் போகின்றாரோ. (14)

## 1500 பெண்கள் தாதிப்பயிற்சிக்குதெரிவாவர்

அண்மையில் நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் அடிப்படையில் முதற் கட்டமாக 1500 பெண் தாதிப்பயிலுநர்கள் அடுத்த மாதம் தெரிந்தெடுக்கப்படவுள்ளனர்.

பின்னர் மேலும் ஒரு தொகுதி தாதிப் பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்படுவர்.

இப் போட்டிப் பரீட்சைக்கு 4600 பேர் தோற்றியிருந்தனர். வடபகுதியிலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு போட்டிப்பரீட்சை நடாத்தப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் முகாமிட்டுள்ள இலங்கைப் பறவைகள்!

தமிழகம் கூந்தான்குளம் பறவைகள் சரணாலயத்தில் இம்முறை மிக அதிகமான பல இன வெளிநாட்டு பறவைகள் கூடியுள்ளதாகத் தமிழகச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

இந்த கூந்தான்குளம் திருநெல்வேலியிலிருந்து 35 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

முன்னர் இந்தச் சரணாலயத்துக்கு வருடத்திற்கு இப் பருவத்தில் நாலாயிரம் பிற நாட்டுப் பறவைகள் வருவது வழமை. இம்முறை இத் தொகை 10 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

கூந்தான்குளத்தில் இம்முறை முகாமிட்டுள்ளவற்றில் பங்களாதேஷ், பர்மா, அவுஸ்திரேலியா நாட்டுப் பறவைகளை மட்டுமின்றி இலங்கையிலிருந்து சென்ற பறவைகளும் அடங்கியுள்ளன.

இப்போது அங்கிருக்கும் இவை ஆடி அமாவாசை மட்டும் அங்கு தங்கியிருக்கும்.

## தமிழகம்; ரசிக்கவும் சிந்திக்கவும் சில உரையாடல்கள்

தற்போதைய நிலையைப் பின்னணியாக வைத்துத் தமிழக வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ள உரையாடல் பகுதி இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது

கடைத்தெருவில் குடிமகன்...

'என்னடா ஒற்றுமை இருக்கு நாட்டிலே... தெற்கே இலங்கையிலே சாகறான். வடக்கே கர்நாடகத்திலே செத்தான் இப்படியே செத்துப் போயிட்டா எத்தனை தமிழன்டா மிஞ்சுவான்? ரோஷம் வாணாம்... எனக்கு வர்ற கோவத்திலே ஊர்லே இருக்கிற எல்லோரையும் வெட்டிச் சாய்க்கணும்டா...

வாணாம்.. வாணாம்... இங்கே இருக்கிறவங்களாவது நல்லபடியா இருக்கட்டும். யாரையும் சாகடிக்காதே. வா

★ ★

கல்லூரி மாணவர்கள்...

"மாப்ளே... அரபிக்கடல் எந்த ஸ்டேட்ல இருக்கு?"

"கேள்வியே உதைக்குது. சரி... தெரியலை"

லிக்விட் ஸ்டேட்ல... அதாவது திரவமாகத்தான் இருக்குது..."

"வெள்ளிக்கிழமையன்னு பாக்கறேன்... இல்லே இன்னிக்கு நீ சமாதிதான்..."

★ ★

"என்னையா ஸ்ரீகாந்தும் சித்துவும் விளையாடறதுக்கு நடுவிலே, ஒருதரமாவது 'பிட்சை' தின்னு பேசறதே காணோம்... ஏதாவது தகராறா? மத்த பாடல் மேனுங்க அடிக்கடி பேசிப்பானுங்களே..."

"என்னா கேள்வி... நம்ம ஸ்ரீகாந்துக்கு இந்தி தெரியாது. சித்துவுக்கு இங்கிலீஸ் தெரியாது... எந்த பாஷையிலே பேசிப்பாங்க..."

★ ★

"மட்டன்" கடையில் ஒருவர்...

கறிக்கடைக்காரரே டாக்டரம்மா வீட்டுலேருந்து வர்றேன். அவங்களுக்குக் கழுத்துக்கறிதான் வேணுமாம், ஏன்னா கழுத்துக் கறியிலே கொழுப்பு இருக்காது..."

'கடைக்காரர் கோபமாக...

"ஏய்யா... இத்தினி வருஷம் கறி வெட்டறேன். எங்கெங்கே கொழுப்பு இருக்குதின்னு எனக்குத் தெரியாதா...? டாக்டர் வீட்டிலேருந்தெல்லாம் வந்து ஏய்யா என் கழுத்தை அறுக்கிறீங்க...?"

★ ★

இரு இளைஞர்கள்...

என்னடா மச்சி... இன்னிக்கு கன்னடர்கள் வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க அனைத்துக் கட்சிகளும் எப்படி ஒற்றுமையா 'பந்த்' நடாத்துறாங்கன்னு பார்க்க வந்தியா?

எனக்கு வயது முப்பத்தஞ்சு ஆகுது, இன்னும் வேலை கிடைக்கலே, வீட்டுக்கும் உழைக்க முடியலே, ஏதாச்சும் கலாட்டாவில் அடிபட்டுச் செத்தாத்தான்டா முதல்வர் நிவாரண நிதியிலேர்ந்து குடும்பத்துக்கு உதவிப்பணம் கிடைக்கும்'

★ ★

அரசு மருத்துவமனையில் கம்பவுண்டரும், நோயாளியும்... (கம்பவுண்டரிடம் சீட்டைக் காண்பித்து...)

'சீட்டுல டாக்டர் மூணு மாத்திரைக்கும் பேர் எழுதிக் கொடுத்திருக்காங்க. நீங்க ரெண்டு மாத்திரைதான் குடுத்திருக்கீங்க?'

'யோவ்... முதல்லை எழுதியிருக்கிறது உன்னோட பேரு... பெரிசா நியாயம் கேட்க வந்துட்டே.

## இளைப்பாறிய ஆசிரியர்கள் சேவைபுரிய விண்ணப்பிக்கலாம்

சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறிய ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

ஆங்கிலம் விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் 44/99 சுற்று நிருபத்தின் கீழ் இளைப்பாறியவர்கள் 30 ஆம் திகதிக்கு முன் யாழ். கல்விப்பணிப்பாளருடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ள வேண்டும்.

# பிறநாடுகளுக்கான ஏவுகணை

## விற்பனையை சீனா நிறுத்தியது!

பாகிஸ்தானுக்கும் ஏனைய பிற நாடுகளுக்குமான ஏவுகணை விற்பனையை நிறுத்த சீனா இணங்கியுள்ளது.

இத்தகவலை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் வாஷிங்டனில் தெரிவித்தார்.

இந்த முடிவுக்கமைய இத்தியாவுக்கான ஏவுகணை செலுத்தும் வாகனம், மற்றும் அதற்கான கம்பியூட்டர் சாதன விற்பனை என்பவற்றையும் சீனா நிறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் வற்புறுத்தலுக்கு அமையவே இந்த முடிவை எடுக்க வேண்டி வந்ததாக சீனா தெரிவித்திருக்கிறது.

சீனாவின் இந்த விற்பனை தொலைதூர ஏவுகணைத் திட்டத்திலே போய் முடியும் என்பதாலேயே அதனை நிறுத்துமாறு தான் வற்புறுத்த வேண்டிவந்ததாக அமெரிக்கா கூறுகிறது.

## வதிவிடவேளாண்மைப்போட்டியில் 12. 211 பேர் பங்குபற்றினர்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் அதிகளவானோர் பங்குபற்றியதாக அறிவிக்கப்படுகின்றது.

12, 211 போட்டியாளர்கள் ஆர்வமுடன் இதிற் கலந்து கொண்டுள்ளனர்.

வதிவிட வேளாண்மைப் போட்டியில் முதலாம், இரண்டாம் கட்ட மதிப்பீடுகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளன. இம்மாதம் 23 ஆம் திகதி அன்று இறுதி மதிப்பீடு உயர்மட்ட மதிப்பீட்டுக் குழுவால், நடாத்தப்பட்டது. இம் மதிப்பீட்டுக் குழுவில் மேலதிக அரசாங்க அதிபர் சண்முகநாதன், உதவி விவசாயப் பணிப்பாளர் க.குணரட்ணம், உதவி சமநல சேவை ஆணையாளர் ஆ. சிவசாமி, கால்நடை அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் அரசரத்தினம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இறுதி மதிப்பீட்டின்போது, யாழ் மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன், மற்றும் யாழ். மாவட்டத் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வதிவிட வேளாண்மை போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் விரைவில் அறிவிக்கப்படும் எனத் தமிழீழ ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

### சிறுவிளம்பரம்

**தவறிவிட்டது**

222070727V என்ற அடையாள அட்டையும், ஒரு பொதிசயிக்கிளையும், இறப்புச் சேர்வையும் புதுறோட்டில் தவறிவிட்டன. தொடர்பு: சாமிநாதர், ஜே. கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். 02051

**மணமக்கள் தேவையா**

எம்மிடம் உள்நாடு, வெளிநாட்டு மணமக்கள் நிறைய இருக்கிறார்கள். மாற்றுச் சம்பந்தத்தை விரும்பாத சோடி மணமக்களுக்கு அரிய சந்தர்ப்பம் ஞாயிற்றுக்கிழமையில் சந்திக்கலாம் மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். 02049

# ரயில் கட்டணம் உயர்வு

# தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

ரயில் கட்டண உயர்வை எதிர்த்து தமிழக பயணிகள் காட்டிய எதிர்ப்பினால் மீனம்பாக்கத்தில் ரயில் பெட்டி ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டது. நான்கு பேருந்துகள் கல்வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்தன.

மீனம்பாக்கம் ரயில் நிலைய பகுதினுள் புகுந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அட்டகாசம் செய்ததில் அலுவலக உடைமைகள் பல சேதமாக்கப்பட்டன.

பேருந்துகளுக்கு கல் வீசியதில் சாரதி ஒருவர் காயமடைந்தார். இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மின்சார ரயில் நான்கு மணித்தியாலம் தாமதமாகியது.

உயர் அதிகாரிகளும் பொலிசாரும் பிரயாணிகளுடன் சமரசம் பேசியதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கல்லூரிகளுக்கு இடையில் இன்று நகரில் கிரிக்கெட்

யாழ் இந்துக்கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டி இன்று சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேபோல சென். ஜோன்ஸ் கல்லூரி - கொக்குவில் இந்து சென் ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

மத்திய கல்லூரி - கனகரத்தினம் மகாவித்தியாலய மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிரிக்கெட் சீசன் ஆரம்பமாகியுள்ளதால் பிரபல கல்லூரி மாணவர்கள் நகர வீதிகளில் தமது கல்லூரிகளுக்கு ஆதரவாக கோஷங்கள் எழுப்பி வருவதையும் காணமுடிகிறது. (16)

## பிரிட்டனைச் சாடுகிறார் அவுஸ்திரேலியப் பிரதமர்

இரண்டாம் உலகப்போரின் போது அவுஸ்திரேலியாவை ஜப்பான் தாக்கப்போகிறது என்பதை அறிந்தும் அவுஸ்திரேலியப் படைவீரர்களை யுத்தமுனைக்கு அனுப்பத் தவறியது என்றும், மலேசியாவையும், சிங்கப்பூரையும் பாதுகாக்க முடியாதென்று பிரிட்டன் அப்போது கூறியது என்றும் அவுஸ்திரேலியப் பிரதமர் குற்றம் சாட்டினார்.

அண்மையில் பிரிட்டிஷ் மகாராணி அவுஸ்திரேலியா சென்றபோது அவுஸ்திரேலியப் பிரதமர் மரியாதைக்குறைவாக நடந்துகொண்டார் என எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் தெரிவித்ததையடுத்தே பிரதமர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

## ஐ. நா. அகதிகள் ஆணைக்குழு அதிருப்தி

# தாயகம் திரும்பும் அகதிகளுக்கு தகுந்த பாதுகாப்பில்லை

இந்தியவிலிருந்து தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் இருப்பதற்கோ அல்லது அகதிமுகாம்களில இருப்பதற்கோ தகுந்த பாதுகாப்பு இல்லை என ஐ. நாவின் அகதிகள் அமைப்பு கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைப்பின் உயர் அதிகாரி ஒருவர் அடுத்த மாதம் இலங்கைக்கு வந்து இவர்கள் தமது சுயவிருப்பத்தினால்தான் வருகிறார்களா என்பது குறித்தும், இவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு இருக்கிறதா என்பது குறித்தும் ஆராய்வார்.

தாயகம் திரும்புவோர் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாதவாறு போர் நடந்துகொண்டிருக்கிற நிலையில் எழுபதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிமுகாம்களிலே தற்போது தங்கியிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய பட்ஜட் விவகாரம்

# எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு மன்மோகன் சிங் மறுப்பு

இந்திய பட்ஜட் விவரங்களை உலகவங்கி முன்னதாகவே அறிந்துகொண்டு விட்டதாக எதிர்க்கட்சிகள் எழுப்பிய குற்றச்சாட்டை நிதியமைச்சர் மன்மோகன் சிங் நேற்று சபையில் மறுத்தார்.

இவ்விவகாரம் தொடர்பாக நேற்றும் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் இரு சபைகளிலும் கேள்விகள் எழுப்பிக்கூச்சலிட்டனர்.

## பாவற்குளத்தில் பலத்த சேதம்

நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தாக்குதலில் பாவற்குளம் பகுதியில படையினருக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நிவாரணத்தில் மோசடி

யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தின் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளையொன்றின் தற்காலிக பொருளாளர் இடம்பெயராதவர்களுக்கு நிவாரணம் வழங்கியுள்ளதாக உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்டிருந்த மண்ணெண்ணையை ஒரு பாடசாலைக்கு இவர் வழங்கியுள்ளதாகவும் அம்முறைப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தபால்...

விவரங்களை ஏனைய ஊழியர்கள் முன்னிலையில் விவரமாக கூறினார்கள்.

தமது குற்றத்தை மன்னித்து மீண்டும் வேலை வழங்குமாறும் இந்த ஊழியர்கள் தபால் அதிகாரிகளிடம் மன்றாட்டமாகக் கேட்டனர்.

ஆனால் தபாற்திணைக்களச் சட்டப்படி இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்க முடியாது என தபாற்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தபோது ஏனைய தபால் ஊழியர்கள் கரகோஷம் செய்தனர். 06

பாகிஸ்தான்...

அணிக்குமிடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 6 விக்கற்றுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 49. 2 ஓவர்களில் சகல விக்கற்றுகளையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து அணி அதன் துடுப்பாட்டத்தில் 48 ஓவர்களில் 4 விக்கற்றுகள் இழப்பிற்கு 160 ஓட்டங்களைப் பெற்றது. (16)

ஆயுதங்களுக்கு...

ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் கப்பல் பணியாளர்கள் பத்துப்பேரையும் இந்திய கடற்படை கைதுசெய்தது.

கப்பல் இப்போது சென்னை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருப்பதும் கைதான பத்து இலங்கையரும் தடாசட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.


விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் ஆதரவில்

கலை பண்பாட்டுக்கழகத்தினரின்

## "சந்தனக்காடு"

(நாடகம்)

சாந்தன் இசைக்குழுவினரின்

"போர்க்கால இராகங்கள்"

இடம்:- சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானம்

காலம்:- 29 - 02 - 92 — பி. ப. 7மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்பளிப்பு: ரூபா. 10.00

★ மேற்படி நிகழ்ச்சி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்தது. தற்போது இது சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

02054



## காலமானார்

## திருமதி கணபதி சின்னப்பிள்ளை

மந்துவிலைச் சேர்ந்த திருமதி கணபதி சின்னப்பிள்ளை 26 2-92 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு சி. கணபதியின் அன்பு மனைவியும் திரு க. நடராசா (தலைவர் பளை அபிவிருத்திச் சபை), திருமதி இ. அன்னபாக்கியம், திரு. க செல்லத்துரை (கந்தபுரம்), திரு. க. வே. தங்கராசா (பிரதமலிகிதர் விலைக்கட்டுப்பாட்டுப்பிரிவு - கச்சேரி, யாழ்ப்பாணம்), திரு க. இராசதுரை (அதிபர் யா/ நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறைக் கொத்தணி), திரு. க. இராசேந்திரம் (ஆசிரியர் கனகாம்பிகை ம-வி கிளிநொச்சி), திரு க. சிவராசா (ஆசிரியர் யாழ் சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் தாயாரும் திருமதி ந. யோகம்மா, திரு. நா. இராசேந்திரம், திருமதி செ குணம், திருமதி த. பரமேஸ்வரி, திருமதி இ தவரத்தினம், திருமதி இ. கமலாதேவி (ஆசிரியை கிளிநொச்சி திருவையாறு அ. த. க பாடசாலை), திருமதி சி. சுசிலா ஆகியோரின் அன்பு மாமியாரும் திரு ந. கருணாகரன் (பிரதம பொறியியலாளர் கொழும்பு வீதி அபிவிருத்திச் சபை), திரு ந. கமலாகரன். திரு. ந. கிருபாகரன், திரு ந. குணாகரன் (பிரான்ஸ்). செல்வி. ந. கலாமதி. திரு. ந. சங்கரகரன் (அவுஸ்திரேலியா) திரு. ந கவிதாகரன், ந. கீதாகரன், ந. கோபிகரன், திருமதி ஸ்ரீகெந்தராணி, ஜமுனராணி, ஜெயராணி, செ நிகேதன் (பிரான்ஸ்) செ நிசாந்தன், செ, கண்ணன், செ. செல்வன் செ தேவி த. பிரேமானந்தி, த. இந்துமதி, த. மதுமதி, த. தினேஸ் த. சதீஸ்குமார், இ, இரமணன், இ. இராதிகா. இ. சங்கீதா, இ. அக்கயா, இ. அஞ்சலா. இ. அகிலன், இ. அனித்தா, சி அலன்நிசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் சனிக்கிழமை 66/3 திருவையாறு கிளிநொச்சியில் நடைபெறும். உற்றார். உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:-

க இராசதுரை (அதிபர்)
யா/ நடேஸ்வராக் கல்லூரி
காங்கேசன்துறை கொத்தணி

02052



## தமிழீழ காவல் துறை

## பதவி வெற்றிடங்கள்

1 அ) உப பரிசோதகர் (Sub Inspectors)

தகைமைகள்:- க. பொ. த (சா/த) 6 பாடங்களில் சித்தி.
5 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க. பொ. த. (உ/த)
உயரம்:- 5 அடி 6 அங்குலம்
வயது:- 18 - 25 வரை

ஆ) காவலர் (பொலிஸ்) பதவி
தகைமை:- க. பொ, த, (சா/த) ஆகக்குறைந்தது 8-ம் வகுப்பு.
உயரம்:- 5 அடி 6 அங்குலம்
வயது:- 18 - 25 வரை

2. அ) சிறைக்காவல் மேற்பார்வையாளர்கள் - உப பரிசோதகர் தரம்
தகைமை:- க, பொ: த: (சா/த) 6 பாடங்களில் சித்தி, 5 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்,
உயரம்:- 5 அடி 6 அங்குலம்
வயது:- 18 - 25 வரை

ஆ) சிறைக்காவலர்
தகைமை:- 8-ம் வகுப்பு சித்தி
உயரம்:- 5 அடி 6 அங்குலம்
வயது:- 18 - 25 வரை

3, தையல்காரர்:-
சீருடை தைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்

மேற்கூறிய பதவிகளுக்கு ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 1992-3-02 திங்கள் காலை 9-00 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல் துறையின் செயலகத்திற்கு சமூகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

02053


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 28-02-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது